Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.109/2018, Cr.No.268/2017, Tirupathur Taluk PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.8, Page.No.80/2023

| | |
|---|---|
| பெயர் | சுகுமார் |
| வயது | 54 |
| தந்தை/கணவர் பெயர் | அண்ணாமலை |
| கிராமம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | ஆச்சாரி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 09th day of March 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (2ம் எதிரி ஆஜர், 1ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆச்சாரியாக வேலை செய்து வருகிறேன். கடந்த 2017 ம் ஆண்டு ஒருநாள் மாலை வேலையில் நான் கோவிலுக்கு சென்று விட்டு வெங்கலாபுரம் அருகே வந்து கொண்டிருந்தபோது, அங்கு காவல் துறையினர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் விவரம் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதேபோல், என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் அன்றைய தினம் விசாரித்துக்கொண்டிருந்த நபரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

போலீசார் கைப்பற்றிய வாகனத்தின் விவரம் எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.09 19:25:33 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.